



admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 344 | 4 Pages | 11.7.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 344 | 4 பக்கங்கள் | 11.7.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே**
**உடம்போ டுயிரிடை நட்பு**

**விளக்கம்:**
**உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதை விட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது.**

## 5 நாடுகள் பயணம் நிறைவு: நமீபியாவில் இருந்து இந்தியா புறப்பட்டார் பிரதமர் மோடி



விண்ட்ஹோக், ஜூலை 11

பிரதமர் மோடி கானா, டிரினிடாட் அண்டு டொபாகோ, அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

கடந்த 2ம் தேதி டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் கானா சென்ற பிரதமர் மோடி அந்நாட்டு அதிபரை சந்தித்தார். பிரதமர் மோடிக்கு கானாவின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து டிரினிடாட் அண்டு டொபாகோ, அர்ஜென்டினா ஆகிய நாடுகளுக்கும் பிரதமர் மோடி சென்றார். டிரினிடாட் அண்டு டொபாகோ நாட்டின் உயரிய விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பிரேசில் சென்ற பிரதமர் மோடி பிரிக்ஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். பிரதமர் மோடிக்கு பிரேசிலின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. இதையடுத்து, நமீபியா சென்ற பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர் நமீபிய அதிபரை சந்தித்தார். பின்னர், நமீபியாவின் உயரிய விருது பிரதமர் மோடிக்கு வழங்கி கவுரவிக்கப்பட்டது.

இந்நிலையில், 5 நாடுகள் சுற்றுப்பயணத்தை நிறைவு செய்த பிரதமர் மோடி நமீபியாவில் இருந்து நேற்று இந்தியா புறப்பட்டார். அவர் இன்று காலை இந்தியா வந்தடைகிறார். கடந்த 8 நாட்களில் 5 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி பயணத்தை நிறைவு செய்து இன்று இந்தியா வருகிறார். அவருக்கு வரவேற்பு அளிக்க அதிகாரிகள் தயாராகி வருகின்றனர்.

## ரெயில்வே கேட்களில் சிசிடிவி கட்டாயமாகிறது ரெயில்வே துறை



புதுடெல்லி, ஜூலை 11

கடலூர் அருகே பள்ளி வேன் மீது ரெயில் மோதிய விபத்தை அடுத்து, ரெயில்வே கேட் மேலாண்மை குறித்து ரெயில்வே துறை மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் நடத்திய இன்று ஆலோசனைக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன அதில்,

ரெயில்வேலெவல்கிராசிங்கில்பின்பற்றவேண்டியநடைமுறைகளை இந்திய ரெயில்வே வெளியிட்டுள்ளது. அதில்,

★ரெயில்வேகேட்கீப்பர்,ஸ்டேஷன்மாஸ்டர்களின்குரல்பதிவுகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

★ அனைத்து ரெயில்வே கேட் மற்றும் கேட் கீப்பர் அறைகளில் சிசிடிவி கேமராக்களை பொருத்த வேண்டும்.

★ கூடுமானவரை அனைத்து இடங்களிலும் இன்டர் லாக் பொருத்த வேண்டும்.

★ ரெயில் வாகனப்பிரிவு 10 ஆயிரத்திற்கு மேல் உள்ள ரெயில்வே கேட்டுகளில் தானியங்கி இன்டர் லாக் அமைக்கப்படும்.

★ அனைத்து ரெயில்வே கேட்டுகளையும் 15 நாட்களுக்குள் ஆய்வு செய்ய் பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்படும்.

★ கூடுமானவரை அனைத்து இடங்களிலும் இன்டர்லாக் பொருத்த வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாற்றுத்திறனாளிகள் திட்டத்தில் பயனடைய ஆதார் கட்டாயம் மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, ஜூலை 11

மாற்றுத்திறனாளிகள் திறன் மேம்பட்டுக்கான தேசிய செயல் திட்டத்தை கடந்த 2015ம் ஆண்டு மார்ச் மாதம் மத்திய அரசு தொடங்கியது. மாற்றுத்திறனாளிகளின் திறன்களை அதிகரிக்க



தொழிற்பயிற்சி அளிப்பதுதான் இதன் நோக்கம்.

இந்நிலையில், இத்திட்டத்தில் பயனாளிகள் போக்குவரத்து படி, தங்குமிட படி, போக்குவரத்து படி உள்ளிட்ட பணப்பலன்களை பெற ஆதார் கட்டாயம் என்று மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், அரசிதழில் அறிவிப்பாணை வெளியிட்டுள்ளது.

ஆதார் எண் இல்லாதவர்கள், ஆதாருக்கு விண்ணப்பித்த ஆதாரத்தை அளிக்க வேண்டும் என்று கூறியுள்ளது. ஆதார் இல்லாத மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்க வசதியாக ஆங்காங்கே ஆதார் பதிவு முகாம்கள் நடத்துமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. ஆதார்எண்ஒதுக்கப்படும்வரை,பிறப்புசான்றிதழ்,பள்ளிஆவணங்கள் போன்றவை மூலம் அடையாளத்தை உறுதிப்படுத்தலாம் என்றும் கூறியுள்ளது.

# திருவாரூர் கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதியில் ஆய்வு மேற்கொண்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

திருவாரூர், ஜூலை 11

திருவாரூர் மாவட்டம் கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதியை பார்வையிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

நேரில் ஆய்வு மேற்கொண்டார். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், தற்கால இளம் சந்ததியினர் அனைவரும் சாதி வேறுபாடின்றி ஒன்றிணைந்து, எதிர்கால தமிழ்ச் சமுதாயத்தை, சமத்துவச் சமுதாயமாகக் கட்டமைத்திட, பல்வேறு சாதி சமயப் பிரிவுகளின் பெயர்களின்கீழ் செயல்பட்டு வரும் மாணவர் விடுதிகளின் பெயர்களை மாற்றிட தமிழ்நாடு அரசு முடிவு செய்து, அதன்படி பல்வேறு துறைகளின்கீழ் செயல்பட்டு வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளை 'சமூகநீதி விடுதிகள்' என்று பெயர் மாற்றம் செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 7.7.2025 அன்று உத்தரவிட்டார்.

"சமூகநீதி விடுதி" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை யொட்டி, அதனை பார்வையிடும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சர்





இன்றையதினம் (10.7.2025) அரசு விழா நடைபெறும் திருவாரூர், எஸ்.எஸ். நகர் செல்லும் வழியில், கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள கல்லூரி மாணவர்களுக்கான சமூகநீதி விடுதி மற்றும் கல்லூரி மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதிகளுக்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டார். அப்போது, சமூகநீதி விடுதியில் உள்ள நூலகம், சமையலறை உணவருந்தும் அறை, பொருள் இருப்பு அறை ஆகியவற்றை முதலமைச்சர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், விடுதியில் உள்ள மாணவ, மாணவியர்களிடம் தேவைகள், விடுதியில் உள்ள வசதிகள், வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவை குறித்தும், உரிய நேரத்தில் உணவு வழங்கப்படுகிறதா என்பது குறித்தும், வார்டன்கள் பணிக்கு வருவது குறித்தும் கேட்டறிந்தார்.

அத்துடன் சமையலறைக்கு சென்று உணவு தயாரிக்கும் பணியாளர்களிடம், காய்கறிகள், மளிகைப் பொருட்கள் இருப்பு குறித்து கேட்டறிந்து, சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து வழங்கிட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கலைவாணன், நாகை மாலி, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வ. மோகனச்சந்திரன், இ.ஆ.ப., தாட்கோ தலைவர் இளையராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# தாராபுரம் அருகே சிவசெல்வநாயகி அம்மன் திருக்கோவில் மகா ஹோம விழா பக்தி பூர்வமாக நடைபெற்றது

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம், கரையூர் அருகே உள்ள ஆலாம்பாளையம் கிராமம் டி. குமாரபாளையத்தில், கன்னிவாடி கண்ணந்தை குலத்தார்களின் புதிய திருக்கோவில் அமைக்க அடிக்கல் நாட்டி மகா ஹோம பூஜை, விழாவில் குருபௌர்ணமி புண்ணிய நாளில் பக்தி பூர்வமாக நடைபெற்றது.



கரையூர் அருள்மிகு சிவசெல்வநாயகி அம்மன், ஸ்ரீ கன்னிமூல கணபதி, ஸ்ரீ தண்டாயுதபாணி, ஏழுபடைக்காரி அம்மன், ஸ்ரீ கோட்டைக்கரை அம்மன், முத்துக்கருப்பணசாமி, கன்னிமார்கள், கரிவரதராஜ பெருமாள் ஆகிய பரிவார தெய்வங்களுக்கு புதிய திருக்கோவில் , கட்டுமான பணிகள் தொடங்குவதற்கான திருக்குட நன்னீராட்டு, திருக்கோவிலில் மகா ஹோமங்கள் மற்றும் விசேஷ பூஜைகள் நடைபெற்றன.

இதில் மிதுன லக்கினத்தில் ஹோமங்கள் தொடங்கின. முக்கியமான ஹோமங்கள்: மகா கணபதி ஹோமம் மகா சுதர்சன ஹோமம் சர்ப ராஜா ஹோமம் நவக்கிரக சாந்தி ஹோமம் சிவசெல்வநாயகி அம்மனுக்கு பூர்ணாஹுதி, தீபாராதனை மற்றும் திருவருட் பிரசாத வழங்கல் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான குலத்தினர்கள், மாப்பிள்ளைமார்கள், பக்தர்கள் கலந்து கொண்டு இறை அருள் பெற்றனர்.

மகா ஹோமங்களை சிறப்பாக நடத்தி வைத்தோர்: சிவாகம செம்மல்" சிவஸ்ரீ மந்திராசல குருக்கள் (எ) ஜம்புக்குட்டி குருக்கள், "சிவகாம வித்யாநிதி, ஜோதிடஞான பானு" சிவஸ்ரீசானமுத்துக்குமார சிவாச்சாரியார், தென்சேரி மலை திருக்கோவில்.

விழா நிகழ்ச்சியின் இறுதியில் அன்னதானம் நடைபெற்று, திரளான பக்தர்கள் அதில் கலந்து கொண்டு திருப்தி அடைந்தனர். இந்த ஆன்மிக நிகழ்வு கண்ணந்தை குலத்தினரிடையே ஒருமைப்பாட்டையும்,இறைநம்பிக்கையையும்வெளிப்படுத்தியது.

இறுதி நிகழ்வாக கோமாதா பூஜை நடத்தப்பட்டு பக்தர்கள் சிவசெல்வநாயகி அம்மன் மற்றும் பரிபார தெய்வங்களை சாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

# ஆனி மாத பவுர்ணமியையொட்டி தி.மலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம்: அண்ணாமலையாரை தரிசிக்க 6 மணி நேரம் காத்திருப்பு

திருவண்ணாமலை, ஜூலை 11

ஆனி மாத பவுர்ணமியான இன்று காலை முதல் திருவண்ணாமலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். அண்ணாமலையார் கோயிலில் கூட்டம் அலைமோதுவதால் சுவாமி தரிசனம் செய்ய சுமார் 6 மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிரசித்தி பெற்ற திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் மாதந்தோறும் பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்று அண்ணாமலையாரை தரிசனம் செய்து வருகின்றனர். அதன்படி ஆனி மாத பவுர்ணமி இன்று அதிகாலை 2.33 மணிக்கு தொடங்கி, நாளை அதிகாலை 3.08 மணிக்கு நிறைவடைகிறது. எனவே, இந்த நேரத்தில் கிரிவலம் செல்ல உகந்தது என கோயில் நிர்வாகம் அறிவித்திருந்தது.



அதன்படி இன்று அதிகாலை கோயில் நடை திறக்கப்பட்டு அண்ணாமலையார், உண்ணாமுலையம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். நடைதிறக்கும்முன்பே பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இன்று அதிகாலை முதல் இரவு 10 மணி வரை நடைஅடைப்பு இல்லாமல் பக்தர்கள் தொடர்ச்சியாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட உள்ளனர்.

இலவச தரிசன வரிசையில் ராஜகோபுரத்தை கடந்தும், கட்டண தரிசன வரிசையில் அம்மணியம்மன் கோபுரத்தை கடந்தும் மாடவீதி வரை நீண்ட வரிசையில் பக்தர்கள் காத்திருந்தனர். சுட்டெரித்த வெயிலையும் பொருட்படுத்தாமல், சுமார் 6 மணி நேரத்துக்கும் மேலாக வரிசையில் காத்திருந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

அதேபோல் காலை முதலே ஆயிரக்கணக்கானபக்தர்கள்கிரிவலம்சென்றனர். தொடர்ந்து கிரிவலம் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் அதிகரித்தது. மேலும் தமிழகத்தின் முக்கிய நகரங்கள் மற்றும் கர்நாடகா, ஆந்திராவில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டது. நகரின் முக்கிய சாலை சந்திப்புகளில் தற்காலிக பஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் இருந்து காட்பாடி, விழுப்புரம் வழியாக திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்களும் இயக்கப்படுகிறது. மேலும் பவுர்ணமி முன்னிட்டு ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.



தினகனி



# அமைச்சர் கோவி.செழியன் தகவல் பி.எட் விண்ணப்ப பதிவு நீட்டிப்பு



சென்னை, ஜூலை 11

நடப்பாண்டு பி.எட். மாணவர் சேர்க்கையில் 7 அரசுக் கல்லூரிகள், 14 அரசு உதவிபெறும் கல்லூரிகள் உள்ளன. இதில் அரசுக் கல்லூரியில் 900 இடங்களும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 1,140 இடங்களுமாக மொத்தம் 2040 இடங்கள் உள்ளன. இவற்றில் 2025 26ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவை கடந்த மாதம் 20ம் தேதி சென்னை ராணி மேரி கல்லூரியில் உயர்கல்வித்துறை அமைச்சர்கோவி.செழியன் தொடங்கி வைத்தார். www.tngasa.in என்ற இணையதள முகவரியில் மாணவமாணவிகள் விண்ணப்பித்து வந்தனர். ஏற்கனவே வெளியிட்ட அறிவிப்பின்படி, விண்ணப்பிக்கும் அவகாசம் ஜூலை 9ம் தேதியுடன் (நேற்றுடன்) நிறைவடைந்தது. இந்நிலையில் மாணவர்களின் நலன் கருதி பி.எட் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் அவகாசம் நீட்டிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் வெளியிட்டுள்ள அறிவிப்பு: கடந்த மாதம் 20ம் தேதி முதல் தொடங்கப்பட்ட விண்ணப்ப பதிவு, நேற்றுடன் (ஜூலை 9) முடிவடைந்ததால், மாணாக்கர்கள் நலன் கருதி விண்ணப்பிக்கும் தேதி வரும் 21ம் தேதி வரை நீட்டிக்கப்படுகிறது. இதை தொடர்ந்து, 31ம் தேதி அன்று மாணாக்கர் தரவரிசைப்பட்டியல் வெளியிடப்படும். ஆகஸ்ட் 4 முதல் 9ம் தேதிக்குள் மாணாக்கர்கள் தங்கள் விருப்ப கல்லூரியை தேர்வு செய்யலாம். ஆகஸ்ட் 13ம் தேதி அன்று மாணாக்கர்களுக்கான இட ஒதுக்கீட்டு ஆணை வெளியிடப்படும். மாணாக்கர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆணையை தங்கள் உள்நுழைவு ஐடி மூலம் www.iwiase.ac.in என்ற இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்லூரியில் சேர்ந்து கொள்ளலாம். ஆகஸ்ட்20முதல்அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பி.எட். முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு வகுப்புகள் தொடங்கும்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# தாவரவியல் பூங்காவில் மரங்களின் அடியில் புற்கள் பதிக்கும் பணி துவக்கம்



ஊட்டி ஜூலை 11

தாவரவியல் பூங்காவில் உள்ள மரங்களின் அடியில் புதிய புற்கள் பதிக்கும் பணி துவங்கி உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் முதல் மற்றும் இரண்டாவது சீசன் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் முதல் சீசனாகவும், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் இரண்டாவது சீசனும் அனுசரிக்கப்படுகிறது.

முதல் சீசனின் போது, பல்வேறு கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் நடத்தப்படுகிறது. இதனை காண வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து பல லட்சம் சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வருவது வழக்கம்.

அதேபோல், இரண்டாம் சீசனின் போதும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவார்கள். இதனால், இவ்விரு சீசன் சமயங்களிலும் பூங்காக்களை தோட்டக்கலைத்துறையினர் தயார் செய்வது வழக்கம்.

முதல் சீசனின் போது மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி நடத்தப்படுகிறது. இம்முறை மலர் கண்காட்சி கடந்த மே மாதம் நடத்தப்பட்டது. மலர் கண்காட்சி காண ஏராளமான ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் ஊட்டி தாவரவியல் பூங்காவிற்கு வந்தனர். மேலும், இம்முறைமேமாதம்தொடர்ந்து மழை பெய்த நிலையில், பூங்காவில் உள்ள புல் மைதானங்கள் பாதிக்கப்பட்டன.

குறிப்பாக, சுற்றுலா பயணிகள் மழையிலேயே பூங்காவில் உள்ள புல் மைதானங்களில் நடந்து சென்ற நிலையில், புல்வெளிகள் பாதிக்கப்பட்டன. இந்த இடங்களில் தற்போது புதிய புற்கள் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக, புல் மைதானங்களில் உள்ள மரங்களின் அடியில் இருந்த புற்கள் முழுமையாக சேதம் அடைந்த நிலையில், தற்போது புதிய புற்கள் பதிக்கும் பணிகள் துவக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ஓரிரு நாட்கள் மேற்கொள்ளப்படும் என ஊழியர்கள் தெரவித்தனர்.

தற்போது, ஊட்டி தாவரவியல் பூங்கா இரண்டாம் சீசனுக்காக தயார் செய்யப்பட்டு வருகிறது. தற்போது பூங்காவில் நடவு பணிகளுக்காக பாத்திகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக புல் மைதானங்கள் சீரமைப்பு பணிகளும் மும்முரமாக நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பரந்தூர் விமான நிலையத்திற்கு 17.52 ஏக்கர் நிலம் பதிவு: நிலம் கொடுத்த 19 பேருக்கு ஒரே நாளில் ரூ.9.22 கோடி இழப்பீடு



சென்னை, ஜூலை 10


சென்னை விமான நிலையத்தில் பயணிகள் அதிகரித்து வருவதால், கூடுதல் பயணியர்விமானம் மற்றும் சரக்கு விமானங்களை கையாளுவதில் வருங்காலத்தில் சிக்கல் ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே சென்னைக்கு இரண்டாவது விமான நிலையம் அமைக்க வேண்டும் என பல ஆண்டுகளாக அரசு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. சென்னை புறநகர் பகுதிகளில் பல்வேறு இடங்களில், சென்னையில் புதிய விமான நிலையம் அமைப்பது குறித்து சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டன. இறுதியாக காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் பகுதியில், சென்னையின் இரண்டாவது விமான நிலையம் அமைக்கப்படும் என ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் அறிவித்தன. இதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து, தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மறுபுறம் விமான நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றிய அரசு இறங்கியுள்ளது. பரந்தூர் பசுமைவெளி விமான நிலையம் அமைப்பதற்கு திட்ட செலவு ரூ.29,150 கோடி என கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் 'டிட்கோ' நிறுவனம் மூலமாக இந்த விமான நிலையம் அமைக்கப்பட உள்ளது. பரந்தூர் விமான நிலையம் பரந்தூர் மற்றும் சுற்றியுள்ள13கிராமங்களில் 5,750 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. ஏகனாபுரம், நாகப்பட்டு உள்ளிட்ட கிராமங்கள் மொத்தமாக இந்த திட்டத்துக்காக கையகப்படுத்தப்பட உள்ளன. இதற்காக விமான நிலையத்திற்காக முதற்கட்டமாக சுமார் 3331.25 ஏக்கர் நிலம் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக நிலம் வழங்கும் விவசாயிகள்மற்றும் பொது மக்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீடு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

அதன்படி, பரந்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள 13 கிராமங்களில் உள்ள நிலங்களுக்கான விலை ஏக்கருக்கு ரூ.35 லட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.2.57 கோடி வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிலத்தின் வகை, தரம், பயன்பாடு, சந்தை மதிப்பு ஆகியவற்றின்அடிப்படையில்விலைகள் வேறுபடும். இந்த நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. நிலம் இழக்கும்மக்களுக்கானநிவாரண நடவடிக்கைகள், வேலை வாய்ப்புகள், புதிய வீட்டுத் திட்டங்கள், மறுவாழ்வாதார வாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் தமிழக அரசு தரப்பில் திட்டமிடப்பட்டுள்ளன.

விமான நிலையத்திற்கு தேவையான நிலம் வழங்குவதற்கான பத்திரப்பதிவு நேற்று முதல் தொடங்கியது. வங்கி கணக்கில் வரவு: நிலம் எடுப்பிற்கு சம்மதம் தெரிவித்து நேற்று 17.52 ஏக்கர் பரப்பு நிலத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு 19 உரிமையாளர்கள் பதிவு செய்து கொடுத்தனர். இந்த நில உரிமையாளர்கள் அனைவருக்கும் நேற்றே நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை ரூ.9.22 கோடி வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிட்டது என காஞ்சிபுரம் கலெக்டர் கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

# சின்னமனூரில் மாடு கட்டி, ஏரு பூட்டி பாரம்பரிய முறையில் பரம்படிக்கும் விவசாயிகள்



சின்னமனூர், ஜூலை 11

சின்னமனூர் பகுதியில், முதல் போக சாகுபடி பணிகள் தொடங்கியுள்ள நிலையில், சில விவசாயிகள்மாடு கட்டி, ஏரு பூட்டி பாரம்பரிய முறையில் பரம்படிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பெரியாறு அணையில் இருந்து, வழக்கம்போல் கடந்த ஜூன் 1ம் தேதி கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது வரை தொடர்ச்சியாகதண்ணீர்திறக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக சுமார் 14,700 ஏக்கர் பரப்பில் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இதில், தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியில் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பில் முல்லைப் பெரியாறு பாசன நீரைப் பயன்படுத்தி வருடம் இருபோகம் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டும், பாசன வசதி கிடைத்துள்ளதாலும், இதமான காலநிலை நிலவுவதாலும் சாகுபடி பணிகளை விவசாயிகள் மும்முரமாக செய்து வருகின்றனர்.

சின்னமனூர் பகுதியில் முதற்கட்டமாக மார்க்கையன் கோட்டை, குச்சனூர், துரைச்சாமிபுரம், கூழையனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடவு பணிகள் நிறைவு பெற்றுள்ளது. 2ம் கட்டமாக சின்னமனூர், முத்துலாபுரம் பரவு, பெருமாள் கோயில் பரவு, பிள்ளைக்குழிமேடு பரவு, வேம்படிகளம் பரவு, துர்க்கை அம்மன் கோயில் பரவுஉள்ளிட்டபகுதிகளில் தற்போது நடவுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மண்ணிற்கு உரமிட்டு டிராக்டர் மூலம் சேற்றுழவு செய்யும் பணிகளும் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், சில பகுதிகளில் விவசாயிகள் பாரம்பரிய முறையில் இரட்டை மாடுகளை கட்டி, ஏர் பூட்டி பரம்படிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனை டிராக்டர் மூலம் மட்டுமே உழவு செய்து பழக்கப்பட்டவர்களுக்கு ஆச்சர்யத்துடன் பார்த்து வருகின்றனர்.

தற்போது புதிய தொழில் நுட்பங்கள் வருகை, வேலைப் பளு, வேலைக்கு ஆட்கள் கிடைக்காதது என பல்வேறு காரணங்களினால் டிராக்டர் மூலம் உழவு செய்வதும், நெல் நாற்றுக்களை இயந்திரம் மூலமாக நடவு செய்வதும், அறுவடை செய்வதும் வழக்கமான நடைமுறையாக மாறிவிட்டது.

இந்த நிலையில், மண்ணில் தண்ணீர் தேக்கி இளகச் செய்து, உரமிட்டு மாடுகட்டி ஏர் பூட்டி வயலை உழும் பாரம்பரிய முறையை விவசாயிகள் மேற்கொண்டு வருவது மீண்டும் இயற்கை விவசாயத்திற்கு திரும்புவதில் விவசாயிகளுக்கு ஆர்வம் அதிகரித்து வருவதை வெளிப்படுத்துவதாக உள்ளது.

தொடர்ச்சியான பாசன வசதி கிடைக்கும் பட்சத்தில் விவசாயிகள் பாரம்பரிய முறைகளை தொடரும் ஆர்வம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஹஜ் பயணத்தை நிறைவு செய்து கடைசி விமான பயணிகள் 383 பேர் சென்னை திரும்பினர்: அமைச்சர் நாசர் வரவேற்றார்



சென்னை, ஜூலை 11

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகள் இந்த ஆண்டு, மே 16ம் தேதி முதல் மே 30ம் தேதி வரை 14 சவுதி அரேபியன் தனி விமானங்கள் மூலம் ஹஜ் புனித பயணத்தை சென்றனர்.ஹஜ் புனித பயணத்தை நிறைவு செய்த அவர்கள், கடந்த ஜூன் 22ம் தேதி முதல் நேற்று வரை 14 சவுதி அரேபியன் தனி விமானங்கள் மூலம் சென்னை வந்து சேர்ந்தனர். நேற்று தாயகம் திரும்பிய, இந்த ஆண்டிற்கான ஹஜ் புனித பயணத்தின் கடைசி விமானத்தில் 383 பயணிகள் சென்னை திரும்பினர். இதில் ஆண்கள் 180, பெண்கள் 203. இவர்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் துறை அமைச்சர் நாசர் சால்வை அணிவித்து வரவேற்றார். தொடர்ந்து, செய்தியாளர்களிடம் அமைச்சர் நாசர் கூறியதாவது: இந்த ஆண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த 5,757 பேர் ஹஜ் சென்றனர். தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான ஏற்பாடுகளை இந்த ஆண்டு செய்திருந்தது. இந்த முறை 150 பேருக்கு, ஒருவர் என 38 ஹஜ் ஆய்வாளர்கள், ஹஜ் பயணம் மேற்கொண்டனர். 4 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட, தற்போது சிறப்பான முறையில், தமிழ்நாடு அரசு ஹஜ் ஏற்பாடுகளை செய்துள்ளது.

# வனத்துறையின் நடவடிக்கையை கண்டித்து ஊட்டி கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்ட மக்கள்




ஊட்டி, ஜூலை 11

அஜ்ஜூர் கிராம மக்களுக்கு எதிராக மாவட்ட வனத்துறையால் தொடங்கப்பட்ட வெளியேற்ற நடவடிக்கைககள் நிரந்தரமாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி கிராம மக்கள் பாரம்பரிய ஆடையுடன்மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். தொடர்ந்து, கிராம மக்கள் மாவட்ட கலெக்டரிடம் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

ஊட்டி அருகேயுள்ள அஜ்ஜூர் கிராமத்தில் 350 குடும்பங்கள் வசிக்கின்றோம். இங்கு வசிக்கும் மக்கள் படுகர் இனத்தை சேர்ந்த மக்கள். இங்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு மேல் வசித்து வருகிறோம். இந்நிலையில், நாங்கள் வசிக்கும் பகுதி வனத்துறைக்கு சொந்தமானது எனக்கூறி எங்களை வெளியேற்ற அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வனச்சட்டத்தின் கீழ் எங்களை வெளியேற்ற வனத்துறை தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அறிவிப்பின்படி, நாங்கள் வசிக்கும் வீடுகள், தேயிலை தோட்டங்கள் மற்றும் விவசாய நிலங்களில் இருந்து வெளியேற வேண்டும் என வனத்துறை அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு, காடுகளை பாதுகாக்கும் நோக்கமாக கொண்டிருந்த போதிலும், எங்கள் முழு கிராமத்தின் வாழ்வாதாரத்தையும், கலாச்சாரத்தையும், இருப்பையும் நேரடியாக பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது.

எங்கள் கிராம நிலத்தை ஒரு காப்பு காடாக மாற்றுவதே வனத்துறையின் நோக்கமாக கூறப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், தலைமுறை தலைமுறையாக இந்த நிலத்தில் வாழ்ந்து வேலை செய்து வந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரத்தையும், கலாச்சார பாரம்பரியத்தையும் சீர்குலைக்கும் நிலை உருவாகும்.

இந்த நிலங்களை நாங்கள் பல தலைமுறையாக பயன்படுத்தி வருகிறோம். இது ஆக்கிரமிப்பு இல்லை. மாறாக பல நூற்றாண்டுகள் பழமையான குடியேற்றத்தின் தொடர்ச்சியாகும். நிலத்தின் மீதான எங்கள் சட்டபூர்வமான உரிமைக்கான ஆவண ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன.

அஜ்ஜூரில் உள்ள சில குடும்பங்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அதற்கான நிலப்பதிவுகள் 1912 மற்றும் 1981ம் ஆண்டிலேயே முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நாங்கள் வசிக்கும் பகுதிக்கு தலைமுறை தலைமுறையாக வரியும் செலுத்தி வருகிறோம். இதற்கான சான்றுகள் எங்களிடம் உள்ளது. வனத்துறையினர் வெளியேற்றுத் திட்டம் செயல்படுத்தினால், இங்கு வசிக்கும் 350 குடும்பங்கள் பாதிக்கும். எங்களை வீடற்றவர்களாக மாற்றும்.

எங்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கும். இந்த நடவடிக்கை எங்களின் அடிப்படை வாழ்க்கை உரிமையையும், வாழ்வாதாரத்தையும் மீறுவதாக அமையும். மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக இந்த நிலங்களை வளர்த்த ஒரு சமூகமாக எங்கள் மூதாதையர் உரிமைகளையும் புறக்கணிக்கும்.

முறையான மறு வாழ்வு அல்லது எங்களை உரிமைகளை அங்கிகரிக்கமால் எங்கள் கிராம நிலத்தை ஒரு காப்பு காடாக மாற்ற முன்மொழியப்பட்டிருப்பது மிகப்பெரிய அநீதியாகும். எனவே, அஜ்ஜூர்கிராம மக்களுக்கு எதிராக மாவட்ட வனத்துறையால் தொடங்கப்பட்ட வெளியேற்ற நடவடிக்கைககள் நிருந்தரமாக நிறுத்த வேண்டும்.

சட்டம் மற்றும் இயற்கை நீதியின் கொள்கையின்படி, 596/1 மற்றும் 596/2 கணக்கெடுப்பு எண்களின் கீழ் விவசாயம் நிலம் மற்றும் குடியிருப்புகளை பயன்படுத்தி வரும் 350 குடும்பங்களுக்கும் எங்கள் வரலாற்று பயன்பாட்டைஅங்கீகரித்து பட்டாவழங்கநடவடிக்கை எடுக்க வேண்டும்.

2006ம் ஆண்டு வன உரிமைகள் சட்டம் உட்பட தொடர்புடைய சட்டத்தின் கீழ் எங்கள் உரிமைகள் போதுமான அளவு பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய, ஒரு பழங்குடியினராக எங்கள் வரலாற்று நிலையை கருத்தில் கொண்டு எங்கள் சமூகத்தின் வகைப்பாட்டினை விரிவான மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

நீலகிரியில் எந்த ஒரு எதிர்கால நில பயன்பாட்டுத்திட்டமும், எங்களை போன்ற நீண்டகால சமூகங்களின் உரிமைகள் மற்றும் வாழ்வாதரங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மனித வாழ்விடத்தை மதிக்கும் நிலையான வளர்சியை ஊக்குவிக்கும். இவ்வாறு அதில் கூறி உள்ளனர்.

# பொள்ளாச்சி சந்தைக்கு மாடுகள் வரத்து குறைவு



பொள்ளாச்சி, ஜூலை 11

பொள்ளாச்சி சந்தைக்கு மாடுகள் வரத்து குறைவாக இருந்தாலும், மழையால் விற்பனை மந்தமானது என வியாபாரிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சியில் உள்ள மாட்டு சந்தைக்கு, வாரத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் சுற்றுவட்டார பகுதி மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்தும். வெளி மாநிலங்களிலிருந்தும் விற்பனைக்காக மாடுகள் கொண்டு வரப்படுகிறது.

இந்த மாதத்தில் கடந்த இரண்டு வாரமாக சந்தைக்கு மாடுகள் வரத்து ஓரளவு இருந்துள்ளது. ஆனால், இந்த வாரத்தில், நேற்று நடந்த சந்தையின் போது வெளி மாநிலங்களிலிருந்தும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மாடுகள் வரத்து குறைவாகவே இருந்தது.

சுமார் 800க்கும் குறைவான மாடுகள் வரபெற்றாலும், கேரள மாநில பகுதியில் பரவலான மழையால், அம்மாநில பகுதியில் இருந்து வியாபாரிகள் வருகை குறைந்ததாக கூறப்படுகிறது. இதனால், நேற்று கேரள மாநில பகுதி மட்டுமின்றி தமிழ்நாடு பகுதியில் இருந்தும் வியாபாரிகள் வருகை குறைவால், விற்பனை மந்தமானது. மேலும், கடந்த வாரத்தை விட, மாடுகள் விலை சற்று குறைவானது.

இதில் காளை மாடு முதல் ரூ.45 ஆயிரத்துக்கும், எருமை மாடு ரூ.40 ஆயிரத்துக்கும், பசு மாடு ரூ.38 ஆயிரத்துக்கும், ஆந்திரா காளை மாடுகள் ரூ.50 ஆயிரம் வரையிலும். கன்றுக்குட்டிகள் ரூ.13 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரையிலும் என கடந்த வாரத்தை விட, ஒவ்வொரு மாடுகளும் ரூ.6 ஆயிரம் முதல் ரூ.8 ஆயிரம் வரையிலும் குறைவான விலைக்கு விற்பனையானது என வியாபாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.

மாட்டுச்சந்தைக்கு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து வாரம் தோறும், வாகனங்களில் மாடுகள் கொண்டு வரப்பட்டாலும், அங்கு போதிய சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறைவால், வியாபாரிகள் வேதனையடைந்துள்ளனர்.

மழை பெய்ததால் அப்பகுதி சேறும் சகதியுமானது. நேற்று களி மண் கலந்த சேற்றில், சரக்கு ஆட்டோ உள்ளிட்ட வாகனங்கள் சிக்கி தவித்தது. இந்த நிலை நீடித்தால், பிரதான சந்தைக்கு மாடுகள் வரத்து குறைந்து வர்த்தகம் பாதிக்கப்படும் நிலை எற்படும் என வியாபாரிகள் வேதனை தெரிவித்துள்னர்.

# ஊட்டி தாவரவியல் பூங்கா சாலையில் ஓடும் சாக்கடை கழிவுநீரால் துர்நாற்றம்



ஊட்டி, ஜூலை 11

ஊட்டி தாவரவியல் பூங்கா சாலையில் பாதாள சாக்கடை தொட்டியில் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் கடும் துர்நாற்றத்துடன் வழிந்தோடுவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு நோய் பரவும் அபாயம் உள்ளது.நீலகிரி மாவட்டம் ஊட்டி நகரில்சுமார்ஒருலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

இதுதவிர ஏராளமான சுற்றுலா பயணிகளும் வந்து செல்கின்றனர். ஊட்டி நகரில் தூய்மை பணிகள், வளர்ச்சி பணிகள் அனைத்தும் ஊட்டி நகராட்சி மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. மொத்தமுள்ள 36 வார்டுகளில் 25க்கும் மேற்பட்ட வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த பாதாள சாக்கடை அமைக்கப்பட்டு நீண்ட நாட்களாகிய நிலையில் பல இடங்களில் சேதமடைந்தும் பழுதடைந்தும் காணப்படுகின்றன. இந்நிலையில், சுற்றுலா பயணிகள் அதிகம் வந்துசெல்லக்கூடிய ஊட்டி தாவரவியல் பூங்கா சாலையில் பழங்குடியினர் பண்பாட்டு மைய கட்டிடத்திற்கு அருகில் உள்ள பாதாள சாக்கடை தொட்டியில் அடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், கழிவுநீர் கடும் துர்நாற்றத்துடன் சாலை மற்றும் கால்வாயில் வழிந்தோடி வருகிறது. இதனால், அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது.

இதனால், நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளநிலையில்,இதனை சரி செய்ய கோரி பொதுமக்கள் பலமுறை நகராட்சியை தொடர்பு கொண்டு தெரிவித்தபோதும்அதனை கண்டு கொள்ளவில்லை எனகூறப்படுகிறது.எனவே பழுதடைந்துள்ள பாதாள சாக்கடையை ஊட்டி நகராட்சி சாரி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

# தனியாக வாக்கிங் சென்றபடி ஆய்வு செய்த கலெக்டர்: ஈரோட்டில் பரபரப்பு




ஈரோடு, ஜூலை 11

ஈரோடு மாவட்ட கலெக்டராக எஸ்.கந்தசாமி கடந்த மாதம் 27ம் தேதி பொறுப்பேற்றார். தொடர்ந்து, மாவட்டத்தில் நடந்து வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை நேரில் ஆய்வு செய்து வருகிறார். இந்நிலையில், கலெக்டர் கந்தசாமி, இன்று காலை அவரது முகாம் அலுவலகத்தில் இருந்து எவ்வித பாதுகாப்பும் இன்றி, தனி நபராக மாநகர சாலைகளில் மக்களில் ஒருவரைபோல, 'வாக்கிங்' சென்றார்.

அப்போது, நகரின் தூய்மை மற்றும் சுகாதார பணிகளை ஆய்வு மேற்கொண்டார். கலெக்டரை அடையாளம் கண்டு, அவ்வழியாக சென்ற மக்கள் அவருக்கு வணக்கம் கூறினர். பதிலுக்கு கலெக்டரும் வணக்கம் கூறி தொடர்ந்து வாக்கிங் சென்றார்.

# சோலையார் அணை பகுதியில் குவியும் சுற்றுலா பயணிகள்

வால்பாறை, ஜூலை 11

வால்பாறை சோலையார் அணையின் முழு நீர் தேக்க மட்டத்தில் கடல் போல காட்சி அளிக்கிறது. இதனால் சோலையார் அணையை காண சுற்றுலா பயணிகள் குவிந்த வண்ணம் உள்ளனர். தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்த நிலையில், வால்பாறையில் கடந்த 2 வாரங்களாக மழைப்பொழிவு அதிகரித்து காணப்பட்டது.



இதனால் வால்பாறை பகுதியில் அருவிகள் மற்றும் ஆறுகளில் நீர் வரத்து அதிகரித்து உள்ளது. திரும்பிய இடமெல்லாம் பச்சை பசேல் என இயற்கை காட்சிகள் மனதை கவரும் விதமாக ரம்மியமாக காட்சியளிக்கிறது. மழை குறைந்து சாரல் மழை தொடர்வதால் சோலையார் அணைக்கு நீர் பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர் வரத்து குறையாமல் தொடர்வதால் சோலையார் அணை நீர்மட்டம் தொடர்ந்து 160 அடி உள்ளது.

எனவே கரையோரம் பல்வேறு தேயிலை எஸ்டேட்களை சேர்ந்த தேயிலை தோட்டங்களை நீர் சூழ்ந்து உள்ளது. சோலையார் அணை நிரம்பி உள்ள நிலையில் சுற்றுலா பயணிகள் வரத்து அதிகரித்து காணப்பட்டது. ஆர்ப்பரித்து செல்லும் நீரை காண தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கேரளாவில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வரத்து அதிகமாக உள்ளது.

அணைக்கு வினாடிக்கு 1703 கன அடி நீர் வரத்து உள்ளது. அணையின் நீர்த்தேக்க நீர்மட்டமான 160 அடி நீர்மட்டம் உள்ளது. அணையில் இருந்து சோலையார் அணை மின் நிலையங்கள் இயக்கப்பட்டு பரம்பிக்குளம் அணைக்கு 800 கன அடி நீரும், கேரளா சோலையார் அணைக்கு 635 கன அடி நீரும் செல்கிறது. அணையில் 5402 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது.

# இழப்பீட்டு தொகை வழங்காமல் இழுத்தடிப்பு பழநியில் பஸ் ஜப்தி

பழநி, ஜூலை 11



பழநியில் இழப்பீட்டு தொகை தராததால் அரசு பஸ் ஜப்தி செய்யப்பட்டது. பழநி புறநகர், சிவகிரிபட்டியை சேர்ந்தவர் கருப்புச்சாமி(24). கொத்தனார். இவர் கடந்த 2018ம் ஆண்டு சிவகிரிப்பட்டி பைபாஸ் சாலையில் சென்று கொண்டிருந்தார். அப்போது அரசு பஸ் மோதியதில் படுகாயமடைந்த கருப்புச்சாமி உயிரிழந்தார்.

இதுதொடர்பாக இழப்பீடு கேட்டு கருப்புச்சாமியின் தாய் பாக்கியம் பழநி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் கடந்த 2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த தீர்ப்பில் போக்குவரத்து கழகம் சார்பில் பாக்கியத்திற்கு ரூ.19 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டது. ஆனால், இதுவரை இழப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை. தற்போது வட்டியுடன் ரூ.29 லட்சம் வழங்க வேண்டி உள்ளது. இதை தொடர்ந்து பாக்கியம் தரப்பின் சார்பில் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இம்மனுவை விசாரித்த கூடுதல் மாவட்ட நீதிபதி மலர்விழி அரசு பஸ்சை ஜப்தி செய்ய உத்தரவிட்டார்.

இதையடுத்து நேற்று பழநி பஸ் நிலையத்தில் நின்றிருந்த அரசு பஸ்சை நீதிமன்ற ஊழியர்கள் ஜப்தி செய்து நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தினர்.

# ஆனைமலை உட்கோட்ட பகுதியில் நான்கு வழிச்சாலையை உறுதிப்படுத்தும் பணிகள்; அதிகாரிகள் நேரில் ஆய்வு

பொள்ளாச்சி, ஜூலை 11

ஆனைமலை உட்கோட்ட பகுதியில் நான்கு வழிச்சாலையை உறுதிப்படுத்தும் பணிகளை அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டு, விரைவில் நிறைவுசெய்யநடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி நகரம் வழியாக பிரிந்து செல்லும் முக்கிய நெடுஞ்சாலைகளாக கோவை ரோடு, பல்லடம் ரோடு, உடுமலை ரோடு, மீன்கரை ரோடு, பாலக்காடு ரோடு, கோட்டூர் ரோடு உள்ளிட்டவை அடங்கியுள்ளது. போக்குவரத்து அதிகமுள்ள இந்த நெடுஞ்சாலைகளில் பாலக்காடு ரோடு, பல்லடம் ரோடு, மீன்கரை ரோடு உள்ளிட்டவை சுமார் 5 ஆண்டுக்கு முன்பு, நான்கு வழிச்சாலைகளாக விரிவாக்கம் செய்ய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து, குறுகலான பாதை மற்றும் போக்குவரத்து மிகுந்த இடம் உள்ளிட்டவை கணக்கிட்டு, அப்பகுதியில் முதற்கட்டமாக அகலப்படுத்தும் பணி நடைபெற்றது. மேலும், பல்வேறு இடங்களில் சென்டர் மீடியனும் அமைக்கப்பட்டது. சுமார் ஒன்றரை ஆண்டுக்கு முன்பு பாலக்காடுரோடு நான்கு வழிச்சாலையாக முழுமையான தையடுத்து, மீன்கரை ரோடு, பல்லடம் ரோடு விரிவாக்க பணி துரிதப்படுத்தப்பட்டது.



இதில், பொள்ளாச்சி நெடுஞ்சாலைகள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் ஆனைமலை உட்கோட்டத்தில், அவிநாசியில் இருந்து, பொள்ளாச்சி பல்லடம் ரோடு வழியாக தமிழக, கேரள எல்லையான மீன்கரை வரைசென்றடையும் சாலை விரிவாக்கப் பணி தீவிரமாக நடைபெற்றது.

அன்மையில் இரண்டாம் கட்ட பணி நடைபெற்றது. ஆனைமலை உட்கோட்டமான மீன்கரை ரோடு திவான்சாபுதூர் முதல் கணபதி பாளையம் வரையிலும் 4 வழிச்சாலையாக அகலப்படுத்தப்பட்ட பகுதியை, உறுதிப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த பணிகளை நேற்று, கோவை வட்ட கண்காணிப்பு பொறியாளர் ரமேஷ் நேரில் ஆய்வு மேற்கொண்டார். மேலும், ரோட்டின் அளவு குறித்து நவீன கருவி கொண்டு அளவீடு செய்தார். அப்போது, சாலையின் தரம், எத்தனை ஆண்டுகள் தார் ரோடு தரமாக இருக்கும் என கேட்டறிந்தார்.

மேலும், மீன்கரை ரோடு நான்கு வழிசாலை பணி ஏதேனும் நிலுவையில் இருந்தால், அதனையும் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினர் இந்த ஆய்வின்போது உதவி கோட்ட பொறியாளர் தினேஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.


இதுகுறித்து ஆனைமலை உட்கோட்ட நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் கூறுகையில், ''ஆனைமலை உட்கோட்டத்தில் அவினாசியில் இருந்து துவங்கி பொள்ளாச்சி வழியாக கேரளமாநிலம் எல்லையான கணபதி பாளையம் வரை செல்லும், திருப்பூர் பல்லடம் ரோடு மற்றும் கொச்சின் சாலை மீன்கரை ரோடு வழியாக கனரக வாகனங்களில் பல்வேறு வகையான சரக்கு பொருட்கள் எடுத்து செல்லும் முக்கிய சாலையாக அமைந்துள்ளது.

இந்த சாலையில் போக்குவரத்து சீராக செல்ல மீனாட்சிபுரம் ரயில்வே கேட் முதல் கணபதிபாளையம் வரை முதற்கட்டமாக நான்கு வழிச்சாலையாக விரிவாக்க பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. தற்போது இந்த பகுதியில் உறுதிப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனை, அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இப்பணிகள் விரைவில் முழுமையடையும் நிலையில் உள்ளது'' என தெரிவித்தனர்.

# செம்மங்குப்பம் ரயில்வே கேட்டில் புதிய கேட் கீப்பராக ஆனந்தராஜ் நியமனம்

கடலூர், ஜூலை 11

செம்மங்குப்பம் ரயில்வே கேட்டில் புதிய கேட் கீப்பராக ஆனந்தராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். ரயில்வே விதிகளை முறையாக பின்பற்ற வேண்டும் என தெற்கு ரயில்வே அறிவுறுத்தியதாக ஆனந்தராஜ் தகவல் தெரிவித்துள்ளார். மத்திய பிரதேசத்தை சேர்ந்தவரை தமிழ்நாட்டில் நியமித்தது சர்ச்சையான நிலையில்தமிழர்நியமிக்கப்பட்டார்.



# புதுச்சத்திரம் வட்டாரத்தில் சொட்டுநீர் பாசனத்துடன் தானியங்கி கருவி அமைப்பு



சேந்தமங்கலம், ஜூலை 11

புதுச்சத்திரம் வட்டாரத்தில் சொட்டு நீர் பாசனத்துடன் கூடிய தானியங்கி கருவி அமைக்கப்பட்டுள்ளது.

இதனை தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். புதுச்சத்திரம் வட்டாரம், நவணி கிராமத்தில் விவசாயி சுப்ரமணியம் என்பவருக்கு சொந்தமான 1.16 எக்டர் விவசாய நிலத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலமாக, நுண்ணீர் பாசனம் திட்டத்துடன் கருவி அமைக்கப்பட்டுள்ளது.

இதனை தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் புவனேஸ்வரி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:

இந்த திட்டத்தின் கீழ், தானியங்கி கருவி அமைப்பதற்கு சிறு குறு விவசாயிகளுக்கு, ஒரு எக்டருக்கு ரூ.22ஆயிரம் மானியமும், இதர விவசாயிகளுக்குரூ.18ஆயிரம் மானியமும் வழங்கப்படுகிறது. விவசாயி சுப்பிரமணியத்திற்கு 1.16 எக்டர் பரப்பிற்கு ரூ.24 ஆயிரம் மானியமாக வழங்க விண்ணப்பம் பெறப்பட்டு, தானியங்கி கருவி நிறுவப்பட்டுள்ளது.

தானியங்கி சொட்டு நீர் பாய்ச்சுவது மிகவும் எளிமையாகவும், வேலை ஆட்கள் பற்றாக்குறையாக உள்ள தருணத்தில், மிகவும் உபயோகமாக இருக்கும். தண்ணீரின் பயன்பாடும் மிகவும் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது.

கைப்பேசி மூலமாக எந்த இடத்திலும் இருந்து இயக்குவதற்கு மிகவும் எளிமையாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். ஆய்வின் போது, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கவின், அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# திருச்செங்கோடு அருகே ரூ.2 கோடியில் தரமற்ற இடத்தில் அமைக்கப்படும் தகன மேடை



திருச்செங்கோடு, ஜூலை 11

திருச்செங்கோடுஅருகே ரூ.2 கோடியில் தரமற்ற இடத்தில் அமைக்கப்படும் எரிவாயு தகன மேடையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருச்செங்கோடு தாலுகா, மொளசிஊராட்சி முனியப்பன்பாளையம் பகுதியில் சுமார் 4 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர். காவிரி கரையில் அமைந்துள்ள இந்த கிராமத்தில், சில மாதங்களுக்கு முன்பு, ரூ.2 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி தொடங்கியது.

அப்போதே மண் பரிசோதனை செய்து, இங்கு கட்டிடம் கட்ட தகுதியாக உள்ளதா என ஆராய்ந்து கட்டிடம் கட்ட வேண்டும். அதுவரை பணியை தொடங்க வேண்டாம் என மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதுகுறித்து கடந்த மார்ச் மாதம், கலெக்டரிடம் புகார் மனுவும் கொடுக்கப்பட்டது.

ஆனாலும், மண் பரிசோதனை செய்யாமல் சாதாரணமாக குழி தோண்டினாலே, 5அடியில் தண்ணீர்வரும் இடத்தில், அஸ்திவாரம் போட்டு கட்டிட பணியை தொடங்கி நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து முனியப்பன்பாளையம் பகுதியை சேர்ந்தவர்கள் கூறியதாவது: எரிவாயு தகன மேடை அமைக்கும் பகுதி, ஏற்கனவே மண் கொட்டி மேம்படுத்தப்பட்ட பகுதி. இங்கு மண் பரிசோதனை, மண் வளமாக உள்ளதா என்பதை ஆய்வு செய்து தான் கட்டிடம் கட்ட வேண்டும்.

பொதுமக்கள்எதிர்ப்பை மீறி, கடந்த இரண்டு மாதங்களாக இப்பணி நடந்து வருகிறது. ஆற்றங்கரையிலிருந்து 90 மீட்டர் தொலைவில் தான், எரிவாயு தகனமேடை அமைக்க வேண்டும் என்ற அரசு விதி இருந்தும், 25 மீட்டர் தொலைவில் உள்ள இந்த பகுதியில் அமைக்கும் இந்த கட்டுமான பணி எவ்வளவு வலுவாக இருக்கும் என்பது தெரியவில்லை. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# தஞ்சை அருகே புதுஆற்றில் கொட்டப்படும் பிளாஸ்டிக் கழிவுகளால் சுகாதார சீர்கேடு



தஞ்சாவூர், ஜூலை 11

தஞ்சையில் இருந்து வெட்டிக்காடு செல்லும் பகுதியில் புதுஆற்றில் தொடர்ந்து கொட்டப்படும் பிளாஸ்டிக் கழிவுகளால் ஆறு கழிவுநீரோடையாக மாறி வருகிறது. ஆற்றில் கழிவுகள் கொட்டுவதை தடுத்து, தூய்மையாக பராமரிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகிறார்கள்.

வானம் பார்த்த பூமியாக இருந்த பகுதிகளும் வளம் பெற வேண்டி வெட்டப்பட்டது தான் புது ஆறு என்று அழைக்கப்படும் கல்லணைகால்வாய். இது விவசாயத்துக்காக மனிதனால் வெட்டப்பட்டது. கல்லணை தலைப்பில் தொடங்கிபுதுக்கோட்டை மாவட்டம் தொண்டியில் உள்ள மும்பாலை வரை 149 கி.மீ. நீளமுடையது இந்த புதுஆறு.

தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 2.29 லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி அளித்து வரும் இந்த ஆறு மூலம் 694 ஏரி, குளங்களுக்கு தண்ணீர் கிடைக்கிறது. தற்போது இந்த ஆற்றில் முழு அளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதனால் இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு தண்ணீர் சீறிப் பாய்ந்து செல்கிறது. ஆற்றில் ஏற்கனவே கொட்டப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள், தெர்மா கோல் அட்டைகள், இறந்த கால் நடைகள், தண்ணீர் பாட்டில்கள், மதுபாட்டில்கள் எல்லாம் தண்ணீரில் அடித்து செல்லப்படுகின்றன. அதுமட்டுமின்றி இரவு நேரங்களில் வீட்டில் உள்ள கழிவுகளை எல்லாம் தண்ணீரில் பலர் கொட்டிவிட்டு சென்று விடுகின்றனர்.

ஆற்றில் கழிவுகளை கொட்ட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டாலும் யாரும் கேட்பதில்லை. இந்த கழிவுகள் எல்லாம் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டாலும் மதகுகள், சிமெண்டு தடுப்புகள் இருக்கக்கூடிய இடங்களில் தேங்கி விடுகின்றன. தஞ்சை புதுஆற்றின் கரையோரம் வெட்டிக்காடு செல்லும் வழியில் வல்லம் வாரி செல்கிறது. இந்த வல்லம் வாரியானது புது ஆற்றின் மேல்பகுதியில் செல்கிறது.

வல்லம் வாரியின் அடிப்பகுதியின் வழியாக புதுஆற்றின் தண்ணீர் சீறி பாய்ந்து செல்லும் வகையில் தொழில்நுட்பத்துடன் தண்ணீர் செல்லும் பாதை அமைக்கப்பட்டு இருக்கிறது.

தண்ணீரில் அடித்து வரப்படும் கழிவுகள் எல்லாம் இந்த வல்லம் வாரி புதுஆறு சந்திக்கும் பகுதியில் தேங்கி கிடக்கிறது. மதுபாட்டில்கள், தண்ணீர் பாட்டில்கள், செருப்புகள், இறந்த கால்நடை, பிளாஸ்டிக் கழிவுகள், ஆகாய தாமரை போன்றவை மொத்தமாக தேங்கி கிடக்கிறது.

இதனால் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இந்த கழிவுகளை அகற்றாமல் விட்டால் தண்ணீரின் அளவை குறைக்கும்போது அவை அங்கிருந்து மிதந்து சென்று மதகுகளில் சிக்கி கொள்ளும்.

அப்படி சிக்கி கொண்டால் கிளை வாய்க்கால்களில் தண்ணீர் திறக்கும்போது அந்த கழிவுகள் எல்லாம் கிளை வாய்க்கால்களின் வழியாக வயல்களுக்கு செல்ல வாய்ப்புகள் அதிகம். தண்ணீருடன் பிளாஸ்டிக் கழிவுகளும் வயல்களுக்கு சென்றால் மண்ணின் தரம் பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

வானம் பார்த்த பூமியாக இருந்த இடத்தில் விவசாயம் செழிக்க வேண்டும் என்பதற்காக மனிதர்களால் மிகவும் கஷ்டப்பட்டு உருவாக்கப்பட்ட புதுஆற்றை பாதுகாக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் கழிவுகளை ஆற்றில் கொட்டுவதை தடுத்து ஆற்றை தூய்மையாக பராமரிக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருவையாறு அருகே வாழை சாகுபடிக்கு இயற்கை உரம் தயாரிப்பு

தஞ்சாவூர், ஜூலை 11

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு அடுத்த வடுக்குடி பகுதியில் வாழை விவசாயத்திற்காக ஆட்டு சாணம் மூலம் இயற்கை உரம் தயாரிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். தஞ்சை மாவட்டத்தில் நெல்லுக்கு அடுத்தபடியாக தென்னை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால், வாழை அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது.

குறிப்பாக காவிரி கரையோர பகுதிகளில் தான் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. மாவட்டத்தில் உள்ள திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, கும்பகோணம், பாபநாசம், அய்யம்பேட்டை பகுதிகளில் அதிக அளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாழை விவசாயம் முக்கியமானது. காவிரி டெல்டா பகுதியில் பரவலாக வாழை பயிரிடப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 3.39 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் செய்யப்படுகிறது.

அதில் 2.69 லட்சம் ஹெக்டேரில் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. தோட்டக்கலை சாகுபடி பரப்பளவு 45,330 ஹெக்டேர் ஆகும். இதில் பழங்கள் சுமார் 4,690 ஹெக்டேர்களில் பயிரிடப்படுகின்றன. 11 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் வாழை சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர்.



குறிப்பாக, பொங்கல் பண்டிகைக்காக வாழைத்தார்களை விவசாயிகள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். இந்த பகுதிகளில் வாழை இலை மற்றும் வாழை நார் பொருட்கள் தயாரிப்பின் மூலம் ஏராளமானோர் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

தஞ்சையை சுற்றியுள்ள திருவையாறு, வடுக்குடி அம்மன்பேட்டை, திருக்காட்டுப்பள்ளி, மேலத்திருப்பூந்துருத்தி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வாழை இலைகள் சென்னையில் உள்ள ஓட்டல்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இப்படி அனுப்பி வைக்கப்படும் இலைகளில் 2 வகைகள் உள்ளன. நுனி இலை, ஏடு என 2 வகைகளாக ஓட்டலுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதேபோல் வாழை நார்களும் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்தநிலையில் தற்போது திருவையாறு சுற்று வட்டார பகுதிகளில் வாழை கன்றுகள் நடும் பணி தொடங்கும் நிலையில் உள்ளது. இதற்காக வாழை விவசாயிகள் தங்கள் பகுதியில் கிடைக்கும் ஆட்டு சாணங்களை விலைக்கு வாங்கி அதனை பவுடராக நுணுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து வாழை விவசாயி மதியழகன் கூறுகையில், இன்னும் சில தினங்களில் புதிதாக வாழைக்கன்றுகள் நடும் பண்ணி தொடங்க உள்ளோம். அதற்கான அனைத்து பணிகளிலும் தற்போது ஈடுபட்டு வருகிறோம்.

காவிரி டெல்டா பகுதியான திருவையாறு திருக்காட்டுப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் தற்போது விவசாய பணிக்காக தண்ணீர் திறந்து முழுமையாக சென்று வருகிறது. அதனை பயன்படுத்தி வாழை சாகுபடியில் ஈடுபட உள்ளோம். நாங்கள் வாழை சாகுபடிக்கு செயற்கை உரங்களை பயன்படுத்துவதில்லை.

முழுமையாக இயற்கை உரத்தை மட்டுமே பயன்படுத்தி வருகிறோம். இயற்கை உரத்திற்காக எங்கள் பகுதியில் கிடைக்கும் ஆட்டு சாணத்தை பெற்று அதனை பவுடராக நுணுக்கி சாலையில் உலர்த்தி வருகிறோம்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு திருவையாறு பகுதியில் இருந்துதான் வாழையிலை வாழைப்பழம் வாழைநார் வாழைப்பூ ஆகிய அனைத்தும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாங்கள் உற்பத்தி செய்யும் வாழை சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களும் தரமானதாக இருக்கும். இதற்குக்காரணம் இயற்கை உரம் தான். இவ்வாறு அவர் கூறினார்.

# மேட்டூருக்கு நீர்வரத்து 42,250 கனஅடி



மேட்டூர், ஜூலை 11

கர்நாடகா அணைகளில் இருந்து உபரிநீர் திறப்பால், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து தொடர்ந்து 43,000 கனஅடியாக நீடிக்கிறது. அதேபோல், மேட்டூர் அணைக்கு மணிக்கு விநாடிக்கு 42,250 கனஅடியாக நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

இதனால் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு 42,250 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் தொடர்ந்து 5வது நாளாக 120 அடியாக நீடிக்கிறது. நீர் இருப்பு 93.47 டி.எம்.சியாக உள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

11.7.2025

## தஞ்சாவூர் - கும்பகோணம் புறவழிச் சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை 5 ஆக உயர்வு

தஞ்சாவூர் , ஜூலை 11

கும்பகோணம் புறவழிச் சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது. டாடா ஏஸ் வாகனத்தில் அமர்ந்து வந்த இளங்கோவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். காரும் சரக்கு வாகனமும் மோதிக் கொண்ட விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு. விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.



## நிகிதாவை கைது செய்யாதது ஏன்? சீமான் கேள்வி



சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரத்தில் போலீசார் விசாரணையில் உயிரிழந்த அஜித்குமார் குடும்பத்தினரை நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தனது தாயார் அன்னம்மாளுடன் நேற்று சந்தித்து ஆறுதல் கூறி ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கினார். பின்னர் சீமான் செய்தியாளர்களிடம் கூறுகையில், ''ஒரு இளைஞனை போலீசார் அடித்தே கொலை செய்துள்ளனர்.

உயிர் பிரியும் வரை எவ்வளவு கொடூரமாக தாக்கியிருப்பார்கள். அஜித்குமார் மரண வலியை எப்படித் தாங்கியிருப்பார் என எண்ணிப்பாருங்கள். புகார் அளித்த நிகிதா மீது பல மோசடி வழக்குகள் உள்ளன. நிகிதாவை ஏன் கைது செய்து போலீசார் விசாரிக்கவில்லை? மாயமாக நகை மீட்கப்பட்டதா? நிகிதா தனது அதிகாரத்தையும், அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்தியுள்ளார். சிபிஐ விசாரணை மட்டும் உண்மைச் சொல்கிறதா என பார்ப்போம். '' என்றார்.

## இன்றைய ராசி பலன்கள் (11.7.2025)

**மேஷம்:** இன்றைய நாள் சிரமமானதாய் போலாம். மனஅழுத்தம் அதிகரிக்க வாய்ப்பு. சாமர்த்தியமாக செயல்படுங்கள்.

**ரிஷபம்:** நல்ல செய்தி வரும். தொழில் தொடர்பான பயண வாய்ப்பு இருக்கிறது. பணவரவுக்கு தாமதம் ஏற்படலாம்.

**மிதுனம்:** உதவி செய்வதில் மகிழ்ச்சி. நீண்ட நாட்களாக யோசித்த காரியம் இன்று தொடங்கலாம். குடும்பம் சந்தோசம்.

**கடகம்:** திடீர் செலவுகள் ஏற்படலாம். உறவினர் மூலம் நன்மை உண்டு. எதிலும்பொறுமையாகஇருங்கள்.

**சிம்மம்:** முக்கிய முடிவுகளை இன்று எடுக்க வேண்டாம். நண்பர்களிடம் வாக்குவாதம் தவிர்க்கவும். உடல்நலம் காக்கவும்.

**கன்னி:** தொழில் வளர்ச்சி காணலாம். உறவினர் உதவியால் நன்மை. சிக்கல்கள் தீரும். மனநிம்மதி கிடைக்கும்.

**துலாம்:** முக்கிய சந்திப்பு ஒன்று இருக்கும். வியாபாரத்தில் லாபம். எதிர்பார்த்த வேலை நிறைவேறும்.

**விருச்சிகம்:** கஷ்டம் என்று நினைத்தது வசீகரமாக முடியும். புதிய நண்பர்கள் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி.

**தனுசு:** தவறான முடிவுகள் தவிர்க்க. கடன் குறைவு ஏற்படும். மன உறுதியுடன் செயல்பட வேண்டும்.

**மகரம்:** உழைப்பிற்கு எதிர்பார்த்த மதிப்பு கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி.

**கும்பம்:** நண்பர்களிடம் நம்பிக்கையுடன் பேசவும். தொழிலில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு. உடல்நலம் சீராக இருக்கும்.

**மீனம்:** இனிய நாளாக அமையும். முயற்சி வெற்றியாகும். புதுமை குறித்த யோசனைகள் பயனளிக்கும்.

## அரசுக்கு ரூ.2.77 கோடி இழப்பு ஏற்படுத்திய வழக்கில் வேளாண் பல்கலை முன்னாள் துணைவேந்தரின் மனு தள்ளுபடி: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 11

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் 2009ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரை துணைவேந்தராக பதவி வகித்தவர் முருகேச பூபதி. இவரது பதவிக்காலத்தில் கரும்பு அறுவடை இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டன. நிபுணர்கள் அறிவுரையை மீறி, இந்த இயந்திரங்கள் கொள்முதல் செய்ததன் மூலம், தனியார் நிறுவனம் 2 கோடியே 77 லட்சம் ரூபாய் லாபமடையச் செய்ததாகவும், அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியதாக வும்திருப்பூர்லஞ்சஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்கக் கோரி, முன்னாள் துணைவேந்தர் முருகேச பூபதி தாக்கல் செய்த மனுவை கோவை சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.



இந்த உத்தரவை எதிர்த்து முன்னாள் துணைவேந்தர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். மனு நீதிபதி பரத சக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசு ஊழியராக இருந்த முன்னாள் துணைவேந்தருக்கு எதிராக வழக்கு தொடர அரசு ஒப்புதல் பெறாததால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று துணைவேந்தர் தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதி, பல்கலைக்கழக சட்டப்படி துணைவேந்தரை பணி நீக்கம் செய்ய அரசின் முன்அனுமதி தேவையில்லை. முன்னாள் துணைவேந்தருக்கு எதிராக வழக்கு தொடர அரசின் முன் அனுமதியும் தேவையில்லை. எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. கடந்த 2012ம் ஆண்டு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால், கோவை சிறப்பு நீதிமன்றம் வழக்கை விரைந்து விசாரித்து முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

## பொறியியல் மாணவர் சேர்க்கை பொது பிரிவினருக்கான சிறப்பு கலந்தாய்வு தொடக்கம்

சென்னை, ஜூலை 11

அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் 417 இன்ஜினியரிங் கல்லூரிகளில் 1.90 லட்சம் இளநிலை இன்ஜினியரிங் படிப்புக்கான இடங்கள் உள்ளன. இதற்கான, 202526ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கை கலந்தாய்வு 7ம் தேதி தொடங்கியது. முதல் கட்டமாக, அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத உள் ஒதுக்கீடு சிறப்பு பிரிவு கலந்தாய்வு நடந்தது. கலந்தாய்வில் பங்கேற்க மொத்தமுள்ள 699 இடங்களுக்கு, மாற்றுத்திறனாளி மாணவர்கள் 137 பேர் தகுதி பெற்றனர். அதேபோல், விளையாட்டு வீரர்கள் பிரிவில் மொத்தம் உள்ள 38 இடங்களுக்கு, 363 பேர் தகுதி பெற்றனர்.

முன்னாள் ராணுவ வீரர்கள் குழந்தைகள் பிரிவில் 11 இடங்களுக்கு 12 பேர் தகுதி பெற்றனர். கலந்தாய்வில் பங்கேற்ற மாணவர்கள் தங்களின் விருப்ப கல்லூரிகளை தேர்ந்தெடுக்க 7ம் தேதி இரவு 7 மணி வரை அவகாசம் வழங்கப்பட்டது. கல்லூரிகளை தேர்ந்தெடுத்த மாணவர்களுக்கு தற்காலிக ஒதுக்கீடு ஆணை 8ம் தேதி காலை 7 மணிக்கு வழங்கப்பட்டன. இதை தொடர்ந்து இன்று பொதுப்பிரிவுகளை சேர்ந்த சிறப்பு பிரிவு (மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்கள், முன்னாள் ராணுவ வீரர்களின் குழந்தைகள்) கலந்தாய்வு நேற்று தொடங்கியது.

கலந்தாய்வில் பங்கேற்க பொதுப்பிரிவில் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ள 9,238 இடங்களுக்கு 485 பேர் தகுதி பெற்றனர். முன்னாள் ராணுவ வீரர்கள் குழந்தைகள் பிரிவில் 138 இடங்களுக்கு 1,377 பேர் தகுதி பெற்றனர்.மேலும்,விளையாட்டுவீரர்கள்பொதுப்பிரிவில் மொத்தம் உள்ள 457 இடங்களுக்கு, 2,449 பேர் தகுதி பெற்றனர். அதேபோல், தொழிற்கல்வி பிரிவில், மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ள 190 இடங்களுக்கு 4 பேரும், முன்னாள் ராணுவ வீரர்கள் குழந்தைகளுக்கு உள்ள 3 இடங்களுக்கு 2 பேரும் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்காக கலந்தாய்வு தொடங்கி நடந்து வருகிறது. இவர்களில் விருப்ப கல்லூரிகளை தேர்ந்தெடுத்த மாணவர்களுக்கு தற்காலிக ஒதுக்கீடு ஆணை நாளை காலை 7 மணிக்கு வழங்கப்படும்.


## பொது சுகாதாரத்துறை தகவல் இதயம் காப்போம் திட்டத்தில் மார்ச் வரை 16,275 பேர் பயன்

சென்னை, ஜூலை 11

இதயம் காப்போம் திட்டத்தின் கீழ் 16,275 பேர் பயனடைந்துள்ளனர் என பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் மாரடைப்பு இறப்பு அதிகரித்து வருகிறது. சரியான நேரத்தில் மாரடைப்புக்கு சிகிச்சை கிடைக்காதது பெரிய பிரச்னையாக இருந்தது. இதற்கு தீர்வாக தமிழக அரசின் 'இதயம் காப்போம் திட்டம்' 2023ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ரூ.3.37 கோடியில் தொடங்கப்பட்டது. ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படும் போது முதல் 60 நிமிடம் மிகவும் முக்கியமானது. எனவே தூரத்தில் இருக்கும்மருத்துவமனைக்குஅழைத்து செல்ல நேரம் ஆகும். இதனால் அருகில்உள்ளஆரம்பசுகாதாரநிலையத்தில் முதலில் மாரடைப்பை தடுக்கும் வகையில் மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

அந்த வகையில், மாரடைப்புடன் வருபவர்களுக்கு அதனை தடுக்கும் வகையில் ஆஸ்பிரின் 150 எம்ஜி 2 மாத்திரைகள், க்ளோபிடோக்ரல் 75 எம்ஜி 4 மாத்திரைகள், அடோர்வாஸ்டாடின் 10 எம்ஜி 8 மாத்திரைகள் என மொத்தம் 14 மாத்திரைகள் வழங்கப்படுகிறது. பிறகு மேல் சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தற்போது இந்த திட்டம் மூலம் கடந்த மார்ச் மாதம் வரை 16,275 பேர் பயனடைந்துள்ளனர். 2023ம் ஆண்டு முதல் மார்ச் மாதம் வரை ஆரம்ப சுகாதார நிலையங்களில் 15,580 பேரும், துணை சுகாதார நிலையங்களில் 695 பேரும் என மொத்தம் 16,275 பேர் மாரடைப்பு அறிகுறியுடன் வந்தவர்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் மாரடைப்பு தடுப்பு மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது.

## மீண்டும் டி.வி. தொடரில் நடிக்கும் ஸ்மிருதி இரானி



இந்தியில் ஆதிஷ், ஹம் ஹெயின் கல் ஆஜ் அவுர் கல் போன்ற டி.வி. தொடர்களில் நடித்து பிரபலமானவர் ஸ்மிருதி இரானி. ஏக்தா கபூர் இயக்கத்தில் உருவான 'கியூங்கி சாஸ் பி கபி பஹூ தி' தொடரில் இவரது துளசி கதாபாத்திரம், இல்லத்தரசிகளின் உள்ளங்களில் இவரை இடம்பெற செய்தது.

இதுதவிர நிதிஷ் பரத்வாஜ் இயக்கத்தில் உருவான ராமாயணம் தொடரில் சீதாவாக நடித்து பேசப்பட்டார். விருத் என்ற தொடரை தயாரிக்கவும் செய்தார். இப்படி சின்னத்திரையில் கலக்கிய ஸ்மிருதி இரானி, 2003ம் ஆண்டில் பா.ஜனதாவில் இணைந்தார். தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். 2014 முதல் 2024ம் ஆண்டு வரை மத்திய மந்திரியாக பதவி வகித்தார். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியை தழுவினார். மந்திரி பதவி போன பிறகு, ஸ்மிருதி இரானி மீண்டும் தாய்வீட்டுக்கே திரும்பியுள்ளார். அதாவது, முன்புபோலவே டி.வி. தொடரில் நடிக்க முடிவு செய்துள்ளார். ஏக்தா கபூரின் 'கியுங்கி சாஸ் பி கபி பஹூ தி' என்ற தொடரின் இரண்டாம் சீசனில் அவர் மீண்டும் துளசி கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இதற்கான புரமோஷன் வீடியோ வெளியாகி வைரலாகி வருகிறது. 15 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் சின்னத்திரையில் களமிறங்கும் ஸ்மிருதி இரானிக்கு வாழ்த்துகள் குவிகிறது.

## ஆஸ்திரேலிய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கோர்டன் காலமானார்

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கோர்டன் ரோர்க் (வயது 87) உடல்நலக் குறைவு காரணமாக காலமானர். 1959ம் ஆண்டு ஆஸ்திரேலிய அணிக்காக அறிமுகமான கோர்டன் ரோர்க், மிகவும் வேகமான பந்து வீச்சாளர்களில் ஒருவராகக் கருதப்பட்டார். இவர் ஆஸ்திரேலிய அணிக்காக 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில், இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஷ் தொடரின் 2 போட்டிகள் மற்றும் இந்தியாவுக்கு எதிரான 2 போட்டிகள் ஆகும்.

அதன்பின்னர், ஹெபடைடிஸ் என்னும் கல்லீரல் வீக்கத்தால் பாதிக்கப்பட்டு கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கிவிட்டார். அடிலெய்டில் நடந்த அறிமுகப் போட்டியில் அவர் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார். இருப்பினும், அவரது பந்து வீச்சு முறை மிகுந்த சர்ச்சைக்குள்ளானது.

இந்திய சுற்றுப்பயணத்தின் போது ஏற்பட்ட கடுமையான உடல்நலக் குறைவு காரணமாக, அவரது கிரிக்கெட் வாழ்க்கை 25 வயதிலேயே முடிவுக்கு வந்தது. முதல் தர கிரிக்கெட்டில், நியூ சவுத் வேல்ஸ் அணிக்காக அவர் 88 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

மிகக் குறுகிய கால சர்வதேச டெஸ்ட் வாழ்க்கையில் 4 போட்டிகளில் விளையாடியிருந்த அவர், 1.73 சராசரியுடன் 10 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சினிமா என்பது கணிக்க முடியாத 'கேம்' போன்றது பறந்து போ பட இயக்குனர்




"கற்றது தமிழ், தங்க மீன்கள், பேரன்பு, தரமணி" உள்ளிட்ட எதார்த்தமான படங்களை இயக்கி ரசிகர்கள் மனதை வென்றவர் இயக்குனர் ராம் . இவர் தற்போது 'பறந்து போ' என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். மிர்ச்சி சிவா கதாநாயகனாக நடித்துள்ள இப்படத்தில் அஞ்சலி, கிரேஸ் ஆண்டனி, அஜு வர்கீஸ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். கடந்த 4ந்தேதி படம் திரைக்கு வந்து பெரிய வரவேற்பை பெற்று வருகிறது.

இதையொட்டி படத்தின் நன்றி அறிவிப்பு கூட்டம் சென்னையில் நடந்தது. விழாவில் இயக்குனர் ராம் பேசுகையில், நிறைவான மகிழ்ச்சியான பயணமாக பறந்து போ படம் அமைந்து உள்ளது. படத்தை சுமார் 40 பேருக்கு திரையிட்டு காண்பித்தேன். படம் பார்த்து விட்டு ராம் காமெடி படம் எடுத்திருக்கார். அதை எப்படி மக்கள் புரிந்து கொள்வார்கள். சிவாவும் நீங்களும் சேர்ந்திருக்கீங்களே எப்படி? என எனக்கு அறிவுரை சொல்ல தொடங்கி விட்டார்கள். நான் தெளிவாக இருந்தேன். உதவி இயக்குனர் ராம் சங்கர்தான் படத்தின் தயாரிப்பாளரை அழைத்து வந்தார். தயாரிப்பாளரிடம் நான் முதலில் கேட்டது சார் நீங்கள் 100 சதவீதம் உறுதியாக இருக்கிறீர்களா? தோல்வி அடைவதற்கும் வாய்ப்பு இருக்கு என கேட்டேன். சினிமா என்பது கணிக்க முடியாத கேம்தான். இப்படியும் நடக்கலாம். அப்படியும் நடக்கலாம். தற்போது படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருவது மகிழ்ச்சி.

## காதலன் கொடுத்த முத்தத்தால் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கிய வீராங்கனை குற்றச்சாட்டில் இருந்து விடுவித்த கோர்ட்டு



டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றவரான பிரான்ஸ் வாள்வீச்சு வீராங்கனை யசாவ்ரா திபஸ் கடந்த ஆண்டு தொடக்கத்தில் ஊக்கமருந்து சோதனையில் சிக்கினார்.அவரதுகாதலரானஅமெரிக்கவாள்வீச்சுவீரர்ரேஸ்இம்போடன்முத்தமிட்டபோது எச்சில் மூலம் 'ஆஸ்டரின்' என்ற தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து அவரது உடலுக்குள் புகுந்து புத்துணர்ச்சி கொடுத்ததாக உலக ஊக்கமருந்து தடுப்பு முகமை குற்றம் சாட்டியது.

ஆனால் இந்த புகாரில் இருந்து அவரை சர்வதேச வாள்வீச்சு சம்மேளனத்தின் ஒழுங்கு கமிட்டி விடுவித்தது. இதனால் பாரீஸ் ஒலிம்பிக்கில் அவரால் பங்கேற்க முடிந்தது. இதை எதிர்த்து உலக ஊக்கமருந்து தடுப்பு முகமை, சுவிட்சர்லாந்தில் உள்ள சர்வதேச விளையாட்டு நீதிமன்றத்தில் அப்பீல் செய்தது. அவருக்கு 4 ஆண்டு தடை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், 'முத்தமிடும் போது எச்சில் வழியாக ஊக்கமருந்தின் தாக்கம் அடுத்தவருக்கு செல்லும் என்பது உண்மை தான். ஆனால் முத்தமிடும் போது தனது காதலர் ஊக்கமருந்தை உட்கொண்டு இருந்தார் என்பது யசாவ்ரா திபசுக்கு தெரியாது. அவர் வேண்டுமென்றே ஊக்கமருந்து விதியை புறக்கணிக்கவில்லை' என கூறி குற்றச்சாட்டில் இருந்து அவரை விடுவித்தது.

## திருமணமே வேண்டாம்.. சிங்கிளாகவே இருந்து விடலாம் என நினைத்தேன் விசித்ரா



தமிழ் திரை உலகில் கவர்ச்சி மற்றும் குணசித்திர பாத்திரங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தவர் விசித்ரா. திருமணமாகி 3 மகன்கள் அவருக்கு இருக்கும் நிலையில் சினிமாவில் இருந்து விலகி இருக்கிறார்.

இந்நிலையில் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் விசித்ரா பேசுகையில், 90 கால கட்டத்தில் நான் சினிமாவில் நடித்து கொண்டிருந்த போது எனக்கு திருமணமாகுமா என யோசித்துக் கொண்டு இருந்தேன். சினிமாவில் இருப்பதால் வெளியிடங்களில் வி.ஐ.பி. மரியாதை கிடைக்கும். ஆனால் குடும்பத்தில் கிடைக்கும் மரியாதை தான் முக்கியம். திருமணமே வேண்டாம். சிங்கிளாகவே இருந்து விடலாம் என நினைத்தேன். திருமணத்திற்கு பிறகு வாழ்க்கை மிகவும் சவாலாக மாறியது. சவால்களை கடந்து வந்த திருமண வாழ்க்கையை என்னால் விவரிக்க முடியவில்லை. உங்களுக்கு அன்பு காட்டும் கணவரும், குழந்தைகளும் ரொம்ப முக்கியம். இன்றைக்கு எனது கணவரும், குழந்தைகளும் என்னுடன் இருப்பது எனக்கு மிகவும் பெருமையாக உள்ளது என்றார்.

## மகளிர் கிரிக்கெட்; ஜிம்பாப்வேவுக்கு எதிரான ஒருநாள், டி20 தொடர்அயர்லாந்து அணி அறிவிப்பு



ஜிம்பாப்வே மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 2 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர்வரும்20ம்தேதிதொடங்குகிறது.இந்ததொடரில்முதலில்டி20போட்டிகளும், அதனை தொடர்ந்து ஒருநாள் போட்டிகளும் நடைபெறுகின்றன.

இந்நிலையில், இந்த தொடர்களுக்கான அயர்லாந்து அணி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிகளுக்கு கேபி லூயிஸ் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அயர்லாந்து ஒருநாள் அணி விவரம்: கேபி லூயிஸ் (கேப்டன்), அவா கேனிங், கிறிஸ்டினா கூல்டர் ரெய்லி, அலானா டால்செல், லாரா டெலானி, சாரா போர்ப்ஸ், ஆமி ஹண்டர், ஆர்லீன் கெல்லி, லூயிஸ் லிட்டில், ஜேன் மாகுயர், லாரா மெக்பிரைட், காரா முர்ரே, லியா பால், ஓர்லா பிரெண்டர்காஸ்ட்.

அயர்லாந்து டி20 அணி விவரம்: கேபி லூயிஸ் (கேப்டன்), அவா கேனிங், கிறிஸ்டினா கூல்டர் ரெய்லி, லாரா டெலானி, ஆமி ஹண்டர், ஆர்லீன் கெல்லி, லூயிஸ் லிட்டில், சோபி மெக்மஹோன், ஜேன்மாகுயர், லாராமெக்பிரைட், காராமுர்ரே, லியா பால், ஓர்லா பிரெண்டர்காஸ்ட், ரெபேக்கா ஸ்டோக்கல்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.